www.padippakam.com


# ஏழைதாசன்

- திங்கள் இலக்கிய இதழ் -

ஆ 11 - 8

மே - 2003

இதழ் எண் : 106

விலை ரூ: 3/-


எல்லோரும் எல்லாம் பெற வேண்டும்

- கண்ணதாசன்


சர்வதேச தொடர்பு எண் : 0091

இணைப்பு எண் : 04[illegible]2

தொலைபேசி எண் : 226426


*உலகெங்கும் இருந்து அழைப்பு விடுக்கும் இனிய உள்ளங்களுக்கு இதயம் கனிந்த நன்றிகள் - ஆர்.*

## பெண்ணியக் கவியருவி! கன்னியத் தமிழருவி!



*கவிதாயினி*

**விக்னா பாக்கியநாதன்,**

துணை ஆசிரியை,

'கலைவிளக்கு' வீடியோப் பத்திரிகை

யேர்மனி.

**டென்மார்க் கவிஞர் பொன்னண்ணா பிறந்த இலங்கை மண்ணின் மண் வாசனை மிக்க கிராமம் வேலணையூரை பிறப்பிட மாகக் கொண்டவர் திருமதி. விக்னா பாக்கிய நாதன் அவர்கள். யேர்மனியில் கடந்த இருபது ஆண்டு களாக வசித்து வருகிறார்.**

படிப்பகம்



# தீராத நோய்கள் எல்லாம் தீர்க்கும் இவன் ஒரு சித்தன்
# இவன் தொட்டிடில் பிணிகள் போம் (அருள்வாக்கு)

சித்த மருத்துவ மேதை
அரிமா டாக்டர்

## A.தேவராஜன், R.M.P. (IND) C.B.I.M. அவர்கள்

கீழ்கண்ட நோய்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கிறார்

**எய்ட்ஸ், மூலம், பவுத்திரம், ஆணிக்கால், சிறுநீரக கல்லடைப்பு (அறுவை சிகிச்சை இன்றி) முகவாத சன்னி, வயிற்றுவலி, வெள்ளை, வெட்டை, பெரும்பாடு, மலட்டுத்தன்மை, குழந்தைகள் உண்டாகுமா? உண்டாகாதா? என்பதை சிறிய பரிசோதனையின் மூலம் துல்லியமாக கூறப்படும், சிகிச்சையும் அளிக்கப்படும்.**

**ஆண்மைகுறைவு, சொப்பன ஸ்கலிதம், சருமவியாதிகள், இருமல், இளைப்பு மற்றும் பல நோய்களுக்கு சிகிச்சை உண்டு.**

மருத்துவத் துறையில் 46 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். 75 வயது நிரம்பியவர். சித்த மருத்துவக் கல்லூரியில் மருத்துவ அதிகாரியாக பணியாற்றியவர். எய்ட்ஸ் சிகிச்சைக்காக சிறப்பு பயிற்சி பெற்றவர். அரிமா இயக்கத்தில் 'எய்ட்ஸ்' நோய் பிரிவிற்கு மதுரை மாவட்டத்திற்கு தலைவராக இருப்பவர். எகிப்து, இஸ்ரேல், ஜோர்டான் முதலிய நாடுகளுக்கு சென்று எய்ட்ஸ் சிகிச்சை முறைகளை விளக்கி வந்தவர். லண்டன், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து நாடுகளில் இருந்து வந்த எயிட்ஸ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து புகழ்பெற்றவர். அமைச்சர்களாலும், பத்திரிக்கையாளர்களாலும் பாராட்டப்பெற்றவர்.

சித்த மருத்துவ மேதை
அரிமா டாக்டர் **A.தேவராஜன்**, R.M.P.(IND)C.B.I.M.
**மனோன்மணி மருத்துவமனை**
7-3/125 பெருமாள்கோவில் தெரு, பேரையூர் (TK)
மதுரை (DT) - 625 703. ☎ : (04549) 435695

பிரதிமாதம் 10,25 தேதிகளில் மதுரையில் கீழ்கண்ட முகவரியில் டாக்டரை சந்தித்து சிகிச்சை பெறலாம். நேரம் காலை 11 மணி முதல் மாலை 7 மணி வரை மற்ற நாட்களில் எனது புதல்வர் டாக்டர் D.C. செங்குட்டுவன் அவர்களிடம் ஆலோசனை பெற்று மருந்துகள் பெற்றுக்கொள்ளலாம் பேரையூர் வர விரும்பினாலும் வரலாம். தபால் மூலம் ஆலோசனை பெற ரூ. 25/- அனுப்பவும்.

டாக்டர் D.C. செங்குட்டுவன் B.Sc.D.H.M.S.,
டாக்டர் பிரீதா செங்குட்டுவன் D.H.M.S.,
போன் : (0452) 521354 (கிளினிக்)
650692 (வீடு)

## ஹோமியோ ஹோம்

**பிரீதா கம்ப்யூட்டரைஸ்டு ஹோமியோ கிளினிக்**
*S-7, கிங்ஸ் கோர்ட், அன்னபூரணா ஹோட்டல் அருகில், அண்ணா பஸ் நிலையம், மதுரை - 625 020.*

பஸ்ஸில் இறங்க வேண்டிய இடம்:
அண்ணா பஸ் நிலையம், மதுரை
வேலை நேரம்
காலை 9.30 முதல் 11 மணி வரை
மாலை 7.30 முதல் 9 மணி வரை
சனி காலை 9.30 முதல் 11 மணி வரை
சனி பிற்பகல், ஞாயிறு விடுமுறை



படிப்பகம்

www.padippakam.com

# விரைவில் இலண்டனில்

## ஈழத்து தமிழ் நூற் கண்காட்சி - 2003

ஈழத்து, புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்து வடிவங்கள் காட்சியில் இடம் பெறும்.

அரசியல், அழகியல், ஆன்மீகம், இதிகாசம், இசையியல், சமயம், வரலாறு, ஓவியம், ஓலைச் சுவடிகள், நாவல், நாடகம், சிறுகதை, சிறுவர் இலக்கியம், கவிதை, திரைப்படப்பிரதி, தொல்லியல், நூலகவியல், போராட்டப் பதிவுகள், சிறு சஞ்சிகை, விவசாயம், புவியியல், சோதிடம், மொழிபெயர்ப்பு... என விரியும் ஈழத்து நூல்களின் கண்காட்சி.

உங்கள் படைப்புகளுடன் படித்து முடித்த நூல்களும் ஈழத்து எழுத்தாளர்களின் ஒலி, ஒளி இழை நாடாக்களும் அனுப்பலாம்.

அனைத்து எழுத்தாளர்களின் பழைய புதிய படைப்புக்களையும் அமரத்துவமான படைப்பாளிகளின் புகைப்படம் உள்ளிட்ட தகவல்களையும் அனுப்புங்கள்.

**இந்த கண்காட்சிக்கு தங்களால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

தொடர்புகட்கு :

**R. MAHENDRAN** (முல்லைஅமுதன்),
34 Redriff Road,
Plaistow,
**London E13 OJX,**
**U.K.**
Tel : 0044 20 85867783



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் வட்டம்

★ எமது சுற்றறிக்கையை ஏழைதாசனில் வெளியிட்டு சிறப்பித்தமைக்கு நெஞ்சார்ந்த நன்றி. அடுத்த திங்கள் 'மே' வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் அனுப்பி வைக்கப்படும்.

— அஞ்சாமை கதிரொளி, மும்பை-88

★ மூன்று வரிகளில் சமுதாயத்தின் இடியாப்பச் சிக்கல்களை தோலுரித்துக் காட்டிய பெண் கவிதாயினிகள் போற்றுதலுக்கு உரியவர்கள். காந்தளகம் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் என அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் கட்டுரை அமைந்திருந்தது சிறப்பு.

— எம். கருண், பேனா நண்பர் பேரவை, மும்பை

★ பத்து பெண்மணிகளின் அய்க்கூ கவிதைகள் பொன்மணிகளாக திகழ்கின்றன.

— சங்கொலி பாலகிருஷ்ணன், பவானி

★ பெண் குயில்களின் கவிதை ஓசை எனக்கு தேனாய் இனித்தது. தாங்கள் என் அருகிலிருந்தால் கட்டித் தழுவி பாராட்டி இருப்பேன். தங்கள் புகழ் இமயம்போல் நிமிர்ந்து நிற்கட்டும். என்னைப்போல் ஏழைக் கவிஞர்களை மதிக்கின்ற... தங்கள் பண்பை பாராட்ட வார்த்தை ஏது?

— கவிஞர் நெல்சன், மடத்தச்சம்பாடு, நெல்லை

★ பெண் படைப்பாளர்கள் அதிகம் இடம் பெற்றது வரவேற்கப்பட வேண்டிய விசயம். நமது இதழ் படிக்கட்டாய் இருப்பதில் இரட்டிப்பு மகிழ்ச்சி. கடுகுக் கவிதைகள் காரமாய் இருந்தன தமிழ்ப் பத்து கவிதைகள் சிறப்பாக இருந்தன.

— ஆங்கரை பைரவி, லால்குடி, திருச்சி

★ பொன்னண்ணாவின் மின்-பாக்கள் மின்சார அதிர்வை ஏற்படுத்தின மூன்றடிகளில் கவிஞர் பொன்னண்ணா தரும் அதிர்வு சமகால உலக அளவிலான அவலங்களின் வெளிப்பாடு கவிதையாய் வருகையில் ஏற்படுகிறது. இதுபோன்ற கவிதைகளை தொடர்ந்து வெளியிடுங்கள். ஆசிரியர் தொகுதி ஏன் நிறுத்தப்பட்டது?

— கவிஞர் அதங்கோடு அனிஷ்குமார்,
ஆராய்ச்சியாளர், ஆங்கிலத்துறை
பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சி

★ புதுவை தமிழ்நெஞ்சன் காதல் கவிதையும் எழுதுவார் என்பதை ஏழைதாசன் மூலமே அறிய முடிந்தது. பெரும்பாலும் அவரது கவிதைகள் தமிழுணர்வு, பகுத்தறிவு கருத்துக்களை தாங்கித்தான் வருவது வழக்கம். காதல் உணர்வை நன்றாக சித்தரித்து இருந்தார் பாராட்டுக்கள். பன்னாட்டு படைப்பாளர்களின் களமாக இதழ் வளர்வது சிறப்பு.

— கவிஞர் இரா. இரவி, மதுரை


படிப்பகம்

www.padippakam.com

★ ஏழைதாசன் அய்க்கூ இதழாக மாறி வருவது அறிந்து இதயம் மகிழ்கிறது. ஏப்ரல் 2003 இதழ் மகளிர் அய்க்கூ சிறப்பிதழாக இருந்தது கண்டு மனம் மலர்ந்தது. அதில் ''மத ஊர்வலத்தைத் / தொடர்ந்தது / மரண ஊர்வலம்'' என்ற அய்க்கூவே சிறப்பானதாய் இருந்தது. அதுவும் ''தொடர்ந்தது / மத ஊர்வலத்தை / மரண ஊர்வலம்'' என்றிருக்க வேண்டும். இல்லையெனில் அது உரை நடை வாசிப்பது போலவே இருக்கும். கடுகுக் கவிதைகளில் ''தன்னை விடுவித்துக் கொள்ள / முட்டை ஓட்டைக் கொத்தி / வெளியேறும் குஞ்சு'' நன்று. இதிலும் 'தன்னை' தேவையில்லை.

— பொன். குமார், சேலம்-6

## அஞ்சல் துறை கவனத்திற்கு ...

★ நீங்கள் 10-01-03இல் எனக்கு அனுப்பியதாக எழுதியிருக்கும் இதழ் எதுவும் இன்றைய திகதிவரை கிடைக்கவில்லை. ஆயினும் 14-01-03 இல் எழுதிய உங்கள் கடிதம் கிடைத்து விட்டது. முன்னைய கடிதத்தை கப்பல் தபாலில் போட்டு விட்டார்களோ தெரியாது. அது என்னிடம் வர 90 நாட்கள் வரையில் செல்லும்.

— என். செல்வராஜா, இலண்டன்

★ தங்களிடமிருந்து பிப்ரவரி இதழ் வரவில்லை. ஒருவேளை விமானத் தபாலை, கப்பல் தபாலில் அனுப்பி விட்டார்களோ என்னவோ மார்ச் இதழும் இதுவரை வரவில்லை. காரணம் தெரியவில்லை.

— வேலு சதானந்தம், பகரைன்

★ சகோதரரே, தாங்கள் அனுப்பிய ஏழைதாசன் பத்திரிகை இன்று வரை கிடைக்கவில்லை. காரணம் புரியவில்லை. மறந்து கப்பல் தபாலில் விமானத் தபாலை அனுப்பி விட்டார்களோ தெரியாது. உண்மையில் உடன் உதவ இயலாமைக்கு மிகவும் வருந்துகிறேன். இது இறைவன் காதில் நிச்சயம் கேட்கும். அவர் உடன் உதவ வழிகளை எனக்குச் செய்வார். ஆகவே கவலை வேண்டாம். தாங்கள் கேட்டது கிடைக்கும் என வாக்களிக்கிறேன்.

— அ. செல்வம், யேர்மனி

---

**ஏழைதாசன்** ✆ 0091 - 04322 - 226426

✶ ஏழைதாசன் வங்கி இலக்கம், முகவரி : EALAIDHASON, A/C No. 90259, Indian Bank, Pudukkottai-1.

✶ ஆண்டுக்கு ரூ. 35/- ✶ வாழ்நாள் ரூ. 350/-

முகவரி : 26, அடப்பன்வயல் 8-ம் வீதி, புதுக்கோட்டை - 622 002, தமிழ்நாடு

Address : 26, Adappanvayal 8th Street, Pudukkottai-622 002,TN,India

---

 படிப்பகம்

www.padippakam.com

# "ஒரு நல்ல இதழை படித்த மகிழ்வு"

அன்பான ஏழைதாசன் ஆசிரியருக்கு;
வணக்கம்.
உங்கள் ஏழைதாசன் இரண்டு இதழ்கள் கிடைத்தன. மிக்க நன்றி; மகிழ்ச்சி.
அருமையான தமிழ்ப்பணிக்கு நல்ல ஈடாக காத்திர விடயங்களை காவி வருவதையிட்டு வாழ்த்துகிறேன்.
பெயரிலே ஏழை ஆனால் இதழிலே அருமையான ஆக்கங்கள் பொதிந்துள்ளன. ஒரு நல்ல இதழை படித்த மகிழ்வு ஏற்பட்டது.
புலம்பெயர் எழுத்தாளர்களின் ஆக்கங்களை ஏந்திவரும் இனிய ஏடாக உள்ளதை கண்ணுற்றேன்.
சிறிய புத்தகமானாலும் பெரிய நோக்கமாக எழுதப்பட்டுள்ளமை கண்டு மகிழ்கின்றேன். தமிழை பாரெங்கும் வளர்க்கும் உங்கள் பாரிய பணிக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.
வெளிவரவுள்ள உங்கள் அய்க்கூ கவிதைத் தொகுப்பில் என் கவிதைகளையும் சேர்த்துக் கொள்வீர்களா? இணைத்திருக்கிறேன்.
எனது முகவரியில் சில திருத்தங்கள் இருப்பதனால் கடிதம் எங்கோ சுற்றியே, பின் எம் கரம் கிடைத்தது.
எனது சரியான முகவரி எழுதியுள்ளேன். தயவுசெய்து இந்த விலாசத்தையே உங்கள் தொடர்புக்கு பாவிக்கவும்.
எப்படி உங்கள் இதழைப் பெறவும், எப்படி கட்டணம் செலுத்துவதையும் கடிதம் மூலம் அறியத் தரவும்.
அன்புடன்,
**நகுலா சிவநாதன்**, யேர்மனி.



படிப்பகம்

www.padippakam.com

# சோரியாசிஸ் நோய்க்கு சென்னை அண்ணா நகரில் இலவச வள்ளலார் மூலிகை மருத்துவ முகாம்

1, ஜூன் 2003 ஞாயிறு காலை 10 மணிமுதல் 1 மணி வரை.
இடம் : ஜோதி பீடம், மனை 2102 13-வது மெயின் ரோடு, 6-வது தெரு, ஒய் பிளாக், அண்ணா நகர், சென்னை-40.

தலைமை : தவத்திரு. **அருப்பெருஞ் ஜோதி அடிகள்**

முன்னிலை : திரு. தர்மலிங்கம், திரு பாண்டுரெங்கம்,
திரு. சத்தியமூர்த்தி, திரு. யோகா சிவாஜி

முகாம் துவக்குனர் :

உயர்திரு. **சு. குமாரசுவாமி** இ.கா.ப.
காவல்துறை தலைமை இயக்குநர்

சிகிச்சை அளிப்போர் :

யோகா & மூலிகை மருத்துவ நிபுணர்கள்

தேவூர்ஜி மணிவாசகம், முல்லைநாதன்,
அன்பானந்தம், சௌந்தர்ராஜன்

நாடுங்கள்! நலம் பெறுங்கள்!

---

## 'சார்ஸ்' நோய்த் தடுக்கும் நொச்சி இலை, தும்பை இலை

தும்பை இலைகள் ஐந்துடன் நொச்சி இலைகள் இரண்டு சேர்த்து நசுக்கி மூக்கில் நுகர சார்ஸ் நோய் பரவாமல் தடுக்கலாம் நோயாளர்களின் நோய் நிலைமைக்கேற்ப விஷ்ணுகிரந்தி, வெள்ளெருகு, நாய்த் துளசி பயன்படுத்தி பலன் பெறலாம்.

— மூலிகை மருத்துவ நிபுணர்
**ஜி. மணிவாசகம்,**
2, கனரா வங்கி சாலை, தேவூர் - 611 109.

இலவச மருத்துவ முகாம் நடத்த தொடர்புறுக : 0091 - 04366 - 275572.


படிப்பகம்

www.padippakam.com

# துளிப்பாக்கள்

☐ குழந்தைகள் தினம்
பெண் பேச்சாளர்
கிரச்சில் அழுகிறது குழந்தை!

☐ பசுமைப்புரட்சி செய்வோம்
பேச்சாளர் அறைகூவல்
கான்கிரீட் மேடை.

☐ புத்தகச் சுமை
பள்ளி நோக்கிப் பிள்ளைகள்
மரங்களைச் சுமக்கும் மலர்கள்!

☐ சின்னத்திரையில் தொடர்
சோபாக்கள் காலி
பக்கத்து வீட்டில் சண்டை!

☐ தமிழ்க் கடவுள்
முருகன் கோயில் சுவரில்
வடமொழி ஓம்!

☐ கோயில் மதில்
சூலத்துடன் பைரவர்
துப்பாக்கியுடன் சிப்பாய்!



படிப்பகம்

www.padippakam.com

☐ போர் நிறுத்தம்
சமாதானப் பேச்சுவார்த்தை
வெளிநாட்டுடன் ஆயுதஒப்பந்தம்!

☐ துப்பாக்கிக் குழாயில் புகை
சிப்பாய் காலடியில் கொக்கு
யுத்த ஓய்வு!

☐ இராணுவம் வெளியேற்றம்
பள்ளிக் கரும்பலகை
சிவப்பைப் பார்க்கும் மாணவர்கள்!

☐ கோயிலை விட்டு
வெளியேறும் இராணுவம்
கடவுளுக்கு இனிமேல் நிவேதனம்!

☐ ஆயுதங்களுடன் காவலர்கள்
வெறிச்சோடிக் கிடக்கும் வீதி
ஆங்காங்கே ஒற்றைச் செருப்புகள்!

☐ வேண்டாம் இந்த விதைகள்
விளைநிலத்தில்
வெடிக்காத விமானக் குண்டுகள்!

**ம.தி. சாந்தன்,**
மரண தண்டனைச் சிறைவாசி,
மத்திய சிறை, வேலூர்-2.

★ (சிறைத்துறை அலுவலர்களால் தணிக்கை செய்து வரப்பெற்றக் கவிதைகள்.)



படிப்பகம்

www.padippakam.com

# ★ அரட்டை அடிக்கும் 'விசு'வை கனடியத்தமிழர் புறக்கணித்தனர்

தென்னிந்திய நடிகர் விசு அவர்கள் ஈழத்தமிழர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி அரட்டை அரங்குகளில் பேசி வந்தார் என்பதற்காக கனடா நாட்டில் வாழும் தமிழர்கள் அவரது நிகழ்ச்சியைப் புறக்கணித்தனர் இதனால் விசுவின் அரட்டை அரங்கம் படுதோல்வியில் முடிந்தது

கடந்த ஆகஸ்ட் 14, 15 ஆம் நாட்களில் விசுவின் அரட்டை அரங்கம் கனடாவின் குட்டி யாழ்ப்பாணம் என்று சொல்லுமளவிற்குத் தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதியான ஸ்கார்புரோ நகரில் உள்ள வின்சன்ட்சேர்ச்சில் கல்லூரி கலையரங்கில் நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

முதல் நாள் நிகழ்ச்சிக்கு 1600 இருக்கைகளைக் கொண்ட அரங்கில் வெறும் 52 பேர் மட்டுமே கூடினர். அவர்களிலும் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களையும் விழா ஏற்பாட்டுக் குழுவினரின் குடும்பத்தினரையும் விலக்கிப் பார்த்தால் இருபதுக்கும் குறைவானவர்களே இருந்தனர். இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு நுழைவுச் சீட்டின் கட்டணம் 25 டொலரில் இருந்து 5 டொலராகக் குறைக்கப்பட்டு விநியோகிக்கப் பட்டது.

வானொலி நிலையம் ஒன்று ஒருபடி மேலே போய் இலவசமாக டிக்கட் வழங்கியும் இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு 71 பேரே அரங்கில் இருந்தனர். இவர்களில் கனடாவில் இருக்கும் தமிழகத்தைச் சேர்ந்த தமிழர்கள், கனடா, அமெரிக்காவில் வாழும் விசுவின் உறவினர்கள், செய்தியாளர்கள், விழா ஏற்பாட்டாளர்கள் அடங்குவர். இரண்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற புறக்கணிப்புப் போராட்டத்திற்கும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது மக்கள் உணர்வு மேலீட்டோடு பங்கு பற்றினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

''தாய்த் தமிழக உறவுகளை ஒழிந்திருந்து தாக்கும் குள்ளநரி'', ''ஈழத் தமிழர் போராட்டம் கசக்கிறது. அவர்கள் பணம் மட்டும் இனிக்கிறதா?'' ''அரட்டை அடிப்பதற்கு கனடா களம் அல்ல; கொறட்டை விடும் தமிழர்களிடம் அதை வைத்துக் கொள்.'' ''வேங்கையின் குகையில் குள்ளநரிக்கு என்ன வேலை?'' ''மனிதநேயம் பேசும் விசு, 26 தமிழர்களுக்கும் தூக்கு போட வேண்டும் என்றது ஏன்?'' ''தமிழினத்தின் பகைவன் விசு! சந்திரிகாவின் துதிபாடும் கொசு!'' போன்ற முழக்க அட்டைகளை ஏந்தி முடிவில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. பல உணர்வாளர்கள் பேசினா

● தமிழ்நெஞ்சம் இதழ், பிரான்சு

 படிப்பகம்

www.padippakam.com

# பெண்ணியக் கவியருவி ! கன்னியத் தமிழருவி !



டென்மார்க் கவிஞர் பொன்னண்ணா பிறந்த இலங்கை மன்னனின் மன்னவாசனை மிக்க கிராமம் வேலணையூரை பிறப்பிடமாகக் கொண்டவர் திருமதி விக்னா பாக்கியநாதன் அவர்கள். யேர்மனியில் கடந்த இருபது ஆண்டுகளாக வசித்து வருகிறார்.

யாழ் பல்கலைக் கழகத்தில் பி.ஏ. பட்டப்படிப்பை முடித்தவர். பதினைந்துக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டு உள்ளார். சென்னை மணிமேகலைப் பிரசுரம் இவரது ஆறு நூல்களை வெளியிட்டு உள்ளது.

இவர் எழுதிய புத்தகங்களின் விபரங்கள் இலண்டன் யாழ் நூலகர். திரு. என். செல்வராஜா அவர்களின் பெரிய முயற்சியில் வெளிவந்த 'நூல் தேட்டம்' என்ற நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

பாரீஸ் வானொலி ஏ.பி.சி. (ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம்) திரு. வன்னை தெய்வம் அவர்களின் ஏழைதாசன் இதழ் அறிமுகம் கேட்டும் இவர் நம்மோடு தொடர்புற்றார்.

சென்னை 'கவிக்கொண்டல்' ஆசிரியர் புலவர் செங்குட்டுவன் அவர்கள் திரட்டி தந்த 10,000 நூல்களைக் கொண்டு அரியதொரு தமிழ் நூலகம் யேர்மனியில் அமைத்து சாதனை புரிய துணையாக நின்றார்!

## இவர் எழுதிய நூல்கள்:

1. ஆதங்கம் (புதுக்கவிதைகள்) 2. பாலர் பாடல் (குழந்தை பாடல்) 3. அழிவின் சுவடுகள் (புதுக்கவிதைகள்) 4. இன்றைய சமுதாயத்தில் பெண்களின் நிலை 5. பணம் பந்தியிலே 6. கவிதைச் சோலை 7. சிறார்களுக்கான சிறு நாடகங்கள் 8. தூரத்து விடியல் 9. இதயச் சிறை 10. குறுகிய காலத்தில் தமிழைக் கற்பிப்பது எப்படி? (ஆய்வுக்கட்டுரைகள்) 11. உறவுக்குப் போராட்டம் 12. இலக்கணம் கற்போம் (இலக்கணப் பாட்டுகள்) 13. மாணவர் கட்டுரைகள் 14. தமிழ் ஆண்டு 3 செயல்நூல் (பாடநூல்) 15. கடுகுவயல் (அய்க்கூ கவிதைகள்) அச்சிலே உள்ளது.

1975-1978 வரை யாழ்பாணப் பல்கலைக் கழகத்தில் கலைமாமணிப் பட்டதாரியாகி பின்னர் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்தியமகா வித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றியமை.

1981 ஜேர்மனிக்குப் புலம் பெயர்ந்து திரு. க. பாக்கியநாதன் பீ.ஏ. (புவியியல் சிறப்பு) அவர்களைத் துணைவராக்கியமை.

1984 சிந்திக்கத்தூண்டிய ஜேர்மனிய கலாச்சாரம் என்னும் ஒப்பீட்டு ஆய்வுநூலை இருவரும் இணைந்து எழுதி வெளியிட்டமை.

1987-1993 வரை கலைவிளக்கு எனும் மாதாந்த சஞ்சிகையை வெளியிட்டு வந்த கணவருக்குத் துணையாசிரியையாகச் செயற்பட்டமை. இன்று இச் சஞ்சிகை கலைவிளக்கு வீடியோப் பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

1987 முதல் இன்றுவரை டோர்ட்முண்ட் கரிதாஸ் தமிழ்ப்பாடசாலையில் பகுதி நேர வேலையாக ஆசிரியையாகப் பணியாற்றல் என நினைவு கூறுகிறார்.

முகவரி : **Mrs. VICKNA PACKIYANATHAN,** DROOTE. 19, 44328 DORTMUND, **GERMANY.**



படிப்பகம்

www.padippakam.com

– கதேலியர்,
ரியாத், சவுதி அரேபியா.



போர் விளைவு
வண்ணத்துப்பூச்சி நீர் அருந்துகிறது
பூக்கும் மலர்களில் கந்தகநெடி!



– அ. இளஞாயிறு,
பெருமாநல்லூர் சாலை, திருப்பூர்.

சேவக்கின் நான்குகள்
சச்சினின் ஆறுகள்
ஆகா! பசி தீர்ந்தது!

– கே. ரஹ்மத் நிஷா,
கடை வீதி, காரைக்கால்.



சுவற்றில் உட்காராதே
கொசுவே,
குறி பார்க்கும் பல்லி!



– த. சதீஷ் தங்கவேலு,
பாரீஸ், பிரான்சு.

யானகிதேவி இராமனைத் தேடி
பயனில்லை
இராவணனையாவது!

– ச. மோகனராசு,
பாண்டியன் நகர், திருப்பூர்.



காவிரியா அடைத்து வை
பவானியா வளைத்து விடு
தேசிய ஒருமைப்பாடா! என்ன அது?



படிப்பகம்

www.padippakam.com

– புதுவை. தமிழ்நெஞ்சன்,
மீனாட்சிப்பேட்டை, புதுச்சேரி-9



தஞ்சை உழவனின் மகன்
கான்வென்டில் படிக்கிறான்
"ரெயின் ரெயின் கோ அவே"!



– 'மேகங்கள்' விஜய்,
விவேகானந்தா நகர், கும்பகோணம்.

கண்ணகி சிலை
மோதி சாய்த்தது
ஜோதிடம்!

– கவிஞர்
சீரா. அரங்கநாயகிராவ்,
புளியங்கொட்டை சாலை, காரைக்கால்.



பெரிசுகள் சொல்வதைக்
கேட்காத சிறிசுகளும்
ஒரு நாள் பெரிசுகளாவர்!



– கவியோவியத் தமிழன்,
அய்யலூர், திண்டுக்கல்.

தெருவில்தான் பிழைப்பு
சாலையோர ஓவியனுக்கு
வக்கற்ற கடவுளோடு!

– பொறிஞர்.
எம்.எஸ். சிவப்பிரகல்யா,
பல்லாவரம், சென்னை - 43.



வியர்க்கின்ற வேருக்கு
உயரத்தில் விசிறி
தென்னங்கீற்று!


படிப்பகம்

# ஏன் தமிழா எழுந்து வா!

அழகுதமிழ் அமுதென்று உண்டு உண்டு
அழியாத நெஞ்ச த்துள் இனித்திருக்க
வழக்கிலின்று மங்கி டாது ஆவோமென்று
வளர்ந்து வரும் அயல் மொழியால் வீழ்ச்சியுற்றால்
முழக்கமிட்டு தமிழ் இன்பம் மீண்டும் நெஞ்சில்
முக்கனியாய் இனித்திருக்க செய்வ தெல்லாமல்
அழகென்ன சொல் தமிழா! தமிழை நல்
அழுதுண்டா சொல் தமிழா! எழுந்து வா
இருந்தன்னை சிறக்கின்ற எழுகதி ராக
இன்பமுறும் தமிழரது திருநாள் வாழ்க!
உருவாகும் உலகினிலே வளம் குவித்து
உவப்பளிக்கும் உழவரது திருநாள் வாழ்க!
திருவிளக்கின் ஒளியாய் ஒளிருகின்ற வென்று
திருவள்ளுவம் திருநாள் வாழ்க! வாழ்க!
திருக்குறளின் முத்தமிழ்க் கழகம் கொஞ்சும்
தமிழினிக்க வாழ்த்தளிக்கும் இந்த நாளிலே!



"மொழிப்போர் மறவர்"
**திருவள்ளூர் பச்சையப்பனார்,**
மணவாள நகர்.

# புகழ் நாட்டி வாழ்ந்திடுவோம்!



விந்தை உலகடா! வேதனையின் கூடமடா!
வெறித்தனமும் நரித்தனமும் தாண்டவ மாடுதடா!
சொந்தமிலா சுற்றம்போல் சுகம்தேய்ந்து மறையுதடா!
சிந்தனிலா உறவுமுறை வெகுதூரம் இருக்குதடா!
எந்நாளில் இதுதீரும்? இறைவா நீயுரைப்பாய்!
எல்லோரும் ஒன்றென்ற உணர்வே நமை சேரும்;
அந்நாள் வரும்வரைக்கும் ஆவியை நீத்தாலும்
அடிமேல் அடிமாறா தொண்டாற்றி வாழ்ந்திருப்பேன்.

அம்பேத்கார் மாமனிதர் தாழ்த்தாரில் பிறந்தாலும்
அன்னை நாட்டின் புகழ் நாட்டி அயல்நாட்டில் கல்வி கற்று
எம்மதமும் சம்மதமாய் சமத்துவமாய் வாழ்ந்திடவே
அரசியல் சாசனத்தை ஆய்ந்தறிந்து அளித்தாரே!
நாமெல்லாம் ஒன்றென்று யாவரையும் அரவணைத்தாரே;
நடுகல்லாய் இருந்தவரை நேருக்குநேர் நிறுத்தி
நம்பும்படி செய்து நல்ல திட்டங்கள் தந்தாரே! அந்த
நாயகன் பெயரில்பல் கலைக்கழகமிட கலவரமா?

சாதிக்கோர் நீதியன்று சகலரும் செயல்பட்டால்
சட்டங்கள் இருந்தென்ன? இறந்தால்தான் என்ன?
சாதிக்கே உரிமை என்றால் சத்தியங்கள் சாகுமடா!
சமத்துவம் தழைத்திடவே சமஉரிமை நிலைத்திடவே
விதிமுறையை நாம் ஒழிப்போம்! வேற்றுமை வேரறுப்போம்!
பேதங்களை நாம் மறப்போம்! பேடித்தனம் மாற்றிடுவோம்!
போதனைகள் செய்திடுவோம்! புத்தன் நெறி புகுத்திடுவோம்!
பொறுப்புள்ள மனிதராய்ப் புகழ்நாட்டி வாழ்ந்திடுவோம்!

கவிக்குயில்
இ.இந்திர். பெருமாள் இ.ஆ.ப.
பொங்கலூர் - 1



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# எது சுதந்திரம்?

மனிதா!
அடிமையாய் கிடக்கவா பிறந்தாய்!
சோத்திற்கா நாள் முழுதும் உழைத்தாய்!
விடுதலை வேண்டாமா உனக்கு?
கொடுமையை எதிர்த்தெழு துணிந்து.



மானமே பெரிதென இயம்பு – எங்கள்
மானமே பெரிதென இயம்பு – வேறு
இனத்தவர் எம் பெருமை கூற இயங்கு
வேற்றுமை இல்லை என்று முழங்கு
–, எம்மில்
வேற்றுமை இல்லை என்று முழங்கு.

வீரனாய் வாழ நீ விரும்பு – தமிழர்
வீரராய் வாழ நீ விரும்பு தமிழர்
வெற்றியே கொள்ள நீ விரும்பு – தர்மம்
வெற்றியே கொள்ள நீ விரும்பு.

ஒற்றுமை காத்திட விரும்பு – எம்மிடையே
ஒற்றுமை சேர்த்திட நீ விரும்பு – அதுவே
எம் பலம் என அனைவர்க்கும் உணர்த்து.



சுதந்திரமாய் வாழ நீ விரும்பு – அனைவரும்
சுதந்திரமாய் வாழ நீ விரும்பு – அதற்காய்
உழைப்பவர்க்கு உறுதுணையாய் இயங்கு – உன்
விடுதலைக்காய் இறந்தோரை வணங்கு – உன்
பரம்பரைக்கும் இவர் பெருமையை இயம்பு.

தலை நிமிர்ந்து வாழ்வது சுதந்திரம்
தன் உழைப்பில் வாழ்வது சுதந்திரம்
தனித்துவமாய் உழைப்பது சுதந்திரம்
தன் மானமாய் வாழ்வது சுதந்திரம்.

விலை பேசி பெறுவதல்ல சுதந்திரம்
விலை இல்லா பொக்கிஷம் சுதந்திரம்.

கவிஞர். வண்ணை தெய்வம்,
ஆசிரியர், 'வண்ணை'
பிரான்சு.

படிப்பகம்

www.padippakam.com

EALAIDHASON ★ TA[illegible] MONTHLY★RNI Regd. No. 55308/92
R.C. No. 22449/98 ✸ 'Registered' No. PMG/CR/01/03-05/PDK

## ஆசிரியர் தொகுதி

சென்ற இதழில் பத்து பெண்பாற் கவிஞர்களின் அய்க்கூகள் மிகுந்த பாராட்டைப் பெற்றுள்ளது. அது அய்க்கூ 500க்கு வந்த படைப்புகளில் தேர்ந்தெடுக்கப் பட்ட சில. இவ்விதழிலும் சில கவிஞர்கள் அகமும் முகமும் காட்டி உள்ளனர்.

அய்க்கூ-500 தொகுப்புப் பணி தொடங்கிவிட்டது. முதல் கட்டமாக 350 கவிஞர்களின் கவிதைகள் தேர்வு செய்யப்பட்டுவிட்டன. சிலர் புகைப்படம் அனுப்பவில்லை. அவர்களுக்கும் புகைப்படம் அனுப்பி தேர்வு பெறத் தக்க அய்க்கூ அனுப்பாதவருக்கும் கடிதம் எழுதி உள்ளோம். கடிதம் கிடைத்தவர்கள் உடனே அய்க்கூ /புகைப்படம்/ ரூ. 25/- பணவிடை அனுப்ப வேண்டுகிறோம்.

உலகெங்கும் உள்ள கவிஞர்களும் அய்க்கூ-500ல் பங்கு பெற்று வருகிறார்கள். அண்டை மாநிலக் கவிஞர்களும் பங்கேற்கிறார்கள். தமிழ்நாட்டின் குக்கிராமத்தில் வாழும் கவிஞர்கள் முதல் கோட்டை (தலைமைச்/செயலகம்) மில் வாழும் கவிஞர்களும் மரண தண்டனைச் சிறைவாசிகளும் தங்கள் எண்ணங்களை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார்கள்.

பார்க்க-படிக்க-ரசிக்க இப்படியே மனம் குதூகளிக்கிறது கவிதைகளையும் புகைப்படங்களையும் பார்க்கவும், படிக்கவும் செய்கிற போது ஒரு புகைப்பட ஆல்பத்தை பார்த்தது போலவும் ஒரு கவிதைத் தொகுப்பை வாசித்த நிறைவும் ஏற்படுகிறது.

நமது முயற்சி புதிது. இத்தொகுப்பை நல்ல மு[illegible]றையில் வெளியிட ஆசை. நாம் முன்னதாக அய்க்கூ 50,100,200 என வெளியிட்டோம். அதில் பங்கேற்ற கவிஞர்கள் பலர் அய்க்கூ-500க்கு படைப்பு அனுப்பி உள்ளார்கள். அனுப்பாத சிலருக்கு தபால் எழுதி உள்ளோம். உடன் பங்கேற்க வேண்டுகிறோம். இன்னும் 100 கவிஞர்கள் தேவை. புதிய/இளைய படைப்பாளர்களை ஊக்கப்படுத்தி எழுதச் சொல்ல வேண்டுகிறோம். அத்துடன் நீங்களும் சேகரித்து அனுப்பி வைக்கலாம். அதுவரை பொறுத்திருப்போம்.

**கடைசி நாள்: 31-06-2003**

பெறுநர் திரு.




200.
Mr. S. MANOHARAN,
Ese. E-13,
210, Ave du 8 Mai 1945,
93150-LE BLANC MESNIL,
FRANCE.

ஏழைதாசன் அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடுபவர், ஆசிரியர் : எஸ். விஜயகுமார்.
முகவரி : 26, அடப்பன்வயல் 8-ம் வீதி புதுக்கோட்டை - 622 002, தமிழ்நாடு, இந்தியா.
Address : 26, Adappanvayal 8th Street, PUDUKKOTTAI - 622 002, TN, INDIA.

படிப்பகம்